**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

| |
|---|
| **நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)** |

**மே, சூன் – 2016**

**P102 உரைநடையும் நாடகமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பதிப்புத்துறையின் பெருவேந்தர் யார்?
2. தனித்தமிழ் நடையில் தம் படைப்புக்களை எழுதியவர்கள் யாவர்?
3. மு.வ. எழுதிய நூல்களின் எண்ணிக்கை யாவை?
4. கண்ணதாசன் நடத்திய இதழ்களின் பெயர்களை எழுதுக.
5. அண்ணாவின் உரைநடை நூல்களை எழுதுக.
6. கூத்து என்பது யாது?
7. தமிழ் நாடக உலகில் மூவர் என்று அழைக்கப்படுபவர்கள் யாவர்?

8. இராஜ ராஜன் பிறந்த நாளன்று நடித்துக் காட்டப்பெற்ற நாடகங்களை எழுதுக.
9. பெண்கள் உருவாக்கி வந்த நாடக சபைகள் எத்தனை?
10. ஓரங்க நாடகம் என்றால் என்ன?
11. வரலாற்று நாடகங்கள் நான்கினை எழுதுக.
12. கல்கியின் எந்த நாவல் வானொலி நாடகம் ஆக்கப்பெற்றது?
13. தமிழ்நாட்டில் இயங்கும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் இரண்டின் பெயர்களைச் சுட்டுக.
14. தருக்கநெறி சார்ந்த உரைநடைக்குச் சான்று தருக.
15. உரைநடையின் பொதுவான பாகுபாடுகள் யாவை?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தமிழக அரசின் பரிசுப் பெற்ற மு.வ. நூல்களை எழுதுக.
2. திரு.வி. க. எழுதிய உரைநடை நூல்கள் பற்றி எழுதுக.
3. சங்கரதாஸ் சுவாமிகள் தலைமையில் நடித்த நடிகர்கள் பின்பற்றின அறக்கோட்பாடு பற்றி எழுதுக.
4. தெருக்கூத்தின் இன்றைய நிலையை எழுதுக.
5. கோ.வி. மணிசேகரன் எழுதிய நாவல்களை எழுதுக.
6. சீர்திருத்த நாடகங்கள் பற்றி எழுதுக.
7. உரைநடை வளர்ச்சியில் அறிஞர் அண்ணாவின் பங்கினை எழுதுக.
8. பதிப்பு துறையில் உ.வே.சா வின் பங்கினை எழுதுக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) உரைநடையின் வளர்ச்சி காலந்தோறும் மாறிவந்த தன்மையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) உரைநடை வளர்ச்சிக்கு மறைமலையடிகளார் ஆற்றிய தொண்டினை விளக்குக.

2. (அ) ரா. பி. சேதுபிள்ளையின் உரைநடை நூல்கள் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் நாடகம் காலந்தோறும் எவ்வகையில் வளர்ந்து வந்துள்ளது என்பதை ஆராய்க.

3. (அ) தெருக்கூத்து நாடகங்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சமூக சீர்திருத்த நாடகங்கள் பற்றி விவரிக்க.